முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

# எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10 திகதி வரை
(20.08.2023 ஞாயிறு முதல் 27.08.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானயுகம் படைக்க வந்த
ஞானபண்டிதன் அவதாரமான
ஞானதேசிகனே அரங்கனே
ஞாலமெங்கும் உன்நோக்கம் நின்றிட
2. நின்றுமே ஞானபலமாக மாறிட
நிலமதனில் அரங்கனுன் பெருமைகூறி
நன்றான இந்தியா தமிழகம் தன்னில்
நல்சோபகிருது வேங்கை திங்களில்
3. திங்களில் சூலதிகதி மேல் தச திகதிவரை
தேசமதில் நடக்கும் வார நிகழ்வாக
இங்கனமே வருங்கால பலன்குறித்து
இயம்பிடுவேன் அகத்தியனும் வார ஆசிதனை
4. ஆசிதனில் மக்களை காப்பேனென
ஆளுமைக்கு வந்தவர்கள் தானும்
நேசக்கரம்பட சேவை ஆற்றிடவே
நிலைத்திருக்க அரசியலில் இனி சாரமுண்டு
5. உண்டான தரும நீதி இன்றி
ஊழல் பதுக்கலில் களம்
கண்டவர்கள் அனைத்துமே
களங்கம் அவப்பேரு கறைகூடி

6. கூடியே நீதியின் பிடிபட்டு
கொண்ட ஆஸ்தி அதிகாரமதை
தேடியதுபோல் விரைந்து இழந்து
தெரிவிப்பேன் பங்கம் காண நேரும்
7. நேருமை கொண்டு இனியேனும்
நீதி நெறி காட்டும் ஞானிகள்
தருமவழி அறிவுரைகள் ஏற்று
தயவான முறையில் மாறுங்கள்
8. மாறிட தீவினையான நிலை
மன்னித்து தேற்றமாக மாறி
ஆறுதலாக மேலவர்கள் துணைபட
அனைத்து மகா சக்திகளும் அருள
9. அருள இந்தியா தமிழக ஆளுமை
ஆற்றல்பட மக்கள் விரும்பும்
இருளை விரட்டும் ஞானஆட்சியாக
இயற்கையும் இறங்கி அருளுகின்ற
10.அருளுகின்ற ஞான பூமியாக
அகிலம் வியக்க மாற்றம் காணும்
மிரளும் அதிகார நிலை மாறி
மென்மை நேர்மை நிறைந்த ஆட்சியாகும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03ம் நாள் 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10ம் நாள் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஞானிகள் ஆட்சி புரியும் ஞானயுகத்தினை உலகினில் உருவாக்கிடவே முருகப்பெருமானின் அவதார சக்தியாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்க மகானே! உலகினில் உமது நோக்கம் நிறைவேறிட மக்களுக்கு ஞானபலம் உண்டாகிட வேண்டியே அரங்க மகானே உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி இந்தியா தமிழகத்தினிலே சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03ம் நாள் 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம்

10ம் நாள் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்களை காப்பேன் எனக்கூறி ஆட்சிக்கு வந்திட்டவர்கள் மக்கள் மீது நேசம் கொண்டு நடந்து சேவை மனப்பான்மையுடன் நடந்து கொண்டால் அவர்களது அரசியலும் ஆட்சியும் நீடித்து நிலைத்து நிற்குமப்பா.

அவ்வாறின்றி தருமமும் நீதியும் இல்லாமல் நடந்து ஊழல் செய்தும், பதுக்கல் செய்தும் வாழ்பவர்கள் எல்லோருக்கும் களங்கமும், அவப்பெயரும் உண்டாகி அவர்கள் நீதியின் பிடியில் அகப்பட்டு அவர்கள் முறையற்ற வகையில் சேர்த்த சொத்துக்களையும் அவர்களது அதிகாரத்தையும் இழந்து வீழ்ச்சி காண நேருமப்பா.

ஆதலினாலே இனிமேலாகினும் அவர்கள் மனம் மாறி நீதி நெறிகளை உபதேசித்து மக்களை நெறிக்குட்பட்ட வாழ்வை வாழ வழிவகை கூறும் ஞானிகளின் தரும வழிகளை, ஞானிகளின் அறிவுரைகளை ஏற்று தயவு நெறிக்கு வந்து நெறிப்படி நடந்து கொள்ளுங்கள்.

தயவு நெறியில் நடந்திட அவர்களைப் பற்றிய தீய சூழ்நிலைகள் எல்லாம் மாறி மன்னிப்பை பெற்று மேலவர்கள் துணையுடன் உலகின் அனைத்து மகா சக்திகளின் அருளையும் பெற்று மக்கள் எல்லாம் விரும்புகின்ற வகையிலே மக்களின் அறியாமை போக்கி ஞானமுடன் கூடிய ஞான ஆட்சியை உருவாக்குவதோடு நாட்டின் இயற்கை வளமும் பெருகி செழுமையான ஞான பூமியாக இந்த உலகமே வியக்குமாறு இந்தியா தமிழகம் மாற்றம் அடையும் அதிகாரம் மிகுந்த ஆட்சியாக இல்லாமல் மென்மையும் நேர்மையும் மிக்க மக்கள் விரும்பும் நல்லாட்சியாக மாறிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—